பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 22 வியாழக்கிழமை 06.03.2025 | அதிர்வு 215

## மின்சாரம் தாக்கி தாயும் மகனும் பரிதாபச் சாவு!

அம்பாந்தோட்டை – சூரியவெவ, வீரியகம பகுதியில் வசித்து வந்த ஒரு தாயும் அவரது ஐந்து வயது குழந்தையும் நேற்று புதன்கிழமை மாலை அண்டை வீட்டில்

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்






# தையிட்டி விகாரை விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன?

## நாடாளுமன்றில் சிறீதரன் கேள்வி

யாழ். தையிட்டி விகாரை சட்ட விரோதமாக அமைக்கப்பட்டிருக்குமாயின் அதற்காக அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இன்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அவர் இந்தக் கேள்வியை முன்வைத்தார்.

அத்துடன் தங்களின் காணியைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்து வரும் காணி உரிமையாளர்களுக்கு அரசு முன்வைக்கும் தீர்வு தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வினவினார்.

இதற்குப் பதிலளித்த புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, இந்த விடயம் தொடர்பில் காணி அமைச்சு உள்ளிட்ட பல நிறுவனங்களிடம் இருந்து தகவல் சேகரிக்கப்பட வேண்டியுள்ளதனால் தமக்குக் கால அவகாசம் வழங்குமாறு கோரினார்.

# தென்னக்கோன் தலைமறைவு: தேடுதல் வேட்டை படு தீவிரம்!



கைது செய்வதற்காகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் தகவல் தெரிந்தால், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறியத்தருமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபரை கைது செய்வதற்கான

03

# ரிவோல்வர் ரக துப்பாக்கியுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது!

(ராமு தனராஜா)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் ரக துப்பாக்கியுடன் இரண்டு சந்தேகநபர்கள் விசேட பொலிஸ் குழுவினால் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டனர் என்று மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கியை வைத்திருந்ததாகக் கூறப்படும் மஹியங்கனை, இல. 40 இன்டஸ்ட்ரியல் கொலனியில் வசிக்கும் 61 வயதுடைய நபரும், துப்பாக்கியைத் தயாரித்ததாகக் கூறப்படும் பதியத்தலாவ பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பதுளை மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்ல அவர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அவரின் அறிவுறுத்தலின் பிரகாரம் மஹியங்கனை பகுதியில் உள்ள முதலாவது சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்ட விசேட பொலிஸ் குழுவினர், வீட்டை



அண்டிய கராச் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குறித்த துப்பாக்கியைக் கண்டுபிடித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, பதியத்தலாவ பிரதேசத்தில் துப்பாக்கி தயாரிக்கும் நபரிடம் இருந்து இந்தத் துப்பாக்கி பெறப்பட்டது என்று கூறினார். அதன் பிரகாரம், சில மணித்தியாலங்களின் பின்னர், மேற்படி சந்தேகநபரையும் பொலிஸ் குழு கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது, தான் சில காலமாக வேட்டையாடும் துப்பாக்கிகள் போன்ற துப்பாக்கிகளைத் தயாரித்து வருவதாகவும், யூடியூப் சேனலில் காணொளியைப் பார்த்து தான் இந்தத் துப்பாக்கியைத் தயாரித்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரைக்கமைய பொலிஸ் பரிசோதகர் சுதேஷ் சதுரங்க, பொலிஸ் கிராதுருகோட்டா உள்ளிட்ட குழுவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, மஹியங்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. டபிள்யூ.எம் விஜேரத்ன தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

சந்தேகநபர்கள் இருவரும் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

# 19 சூட்டுச் சம்பவங்கள்: 68 பேர் சிக்கினார்கள்!



இலங்கையில் 2025 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 19 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 68 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் இன்று கூறினார்.

"பாதாள உலகக் குழுக்களால் 12 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும், தனிப்பட்ட மற்றும் இதரகாரணங்களால் 7 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. 13 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன." – என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மின்சாரம் தாக்கி...**

சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 38 வயதுடைய தாயும் அவரது 5 வயது மகனுமே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்த குழந்தை, தான் வசித்து வந்த வீட்டுக்கு அருகிலுள்ள ஒரு வீட்டுக்கு விளையாடுவதற்காக சிறுவர்கள் பயன்படுத்தும் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கிக் கொண்டுள்ளது.

இதனையடுத்து தனது மகனைக் காப்பாற்றுவதற்காக சம்பவ இடத்துக்கு ஓடிய தாயும் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சூரியவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மேர்வின் கைது: காரணம் என்ன?

## பொலிஸார் விளக்கம்



கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணைங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய, இது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்த மோசடி தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுடன் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தென்னக்கோன்...**

நடவடிக்கையில் பல பொலிஸ் குழுக்கள் செயற்பட்டு வருவதாகவும், அவர் தற்போது சட்டத்துக்குக் கீழ்ப்படியாமல் தலைமறைவாக உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

நீதிமன்ற உத்தரவை மீறி தப்பிச் சென்ற சந்தேகநபர்களைக் கைது செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே நடைமுறையின் கீழ், முன்னாள் பொலிஸ்மா அதிபரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், யாராவது அவர் தலைமறைவாக இருப்பதற்காக உதவி புரிவார்களானால், அவர்களுக்கு எதிராகவும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் வழக்கத்தை விட அதிக முயற்சியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாக இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# இரத்தினபுரியில் ஆணின் சடலம்!



இரத்தினபுரி, கொலொன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கொலொன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் நமுத்கடுவ, மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் அநடரஅதெரிய வருவதாவது,

சம்பவ தினத்தன்று, உயிரிழந்தவர் கொலொன்ன பகுதியில் உள்ள தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், இவர் நேற்றுமுன் தினம் இரவு உணவை உட்கொண்டு உறங்கச் சென்றுள்ள நிலையில் நேற்று காலையில் அறையினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொலொன்ன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வரலாற்றுக் குற்றம்

தனியார்துறை ஊழியர்களின் தொழில் கால சேமிப்பு, அவர்கள் தொழில் செய்யும் காலத்தில் அவர்கள் பெயரில் சேமிக்கப்படும் 'ஊழியர் சேம லாப நிதி' மட்டும்தான்.

வயது கடந்து, உடல் செயலிழந்து, அவர்கள் ஓய்வு பெறும்போது, இளைப்பாறும் காலத்தில் அவர்களிடம் மிஞ்சப்போவது அது மட்டுமே. சேவைக் காலத்தில் அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தில் மிஞ்சுவது அந்த சேமிப்பு மட்டும்தான்.

அரசு ஊழியர்களுக்குக் கிட்டுவது போல வாழ்க்கையின் முடிவு காலம் வரையும் - பின்னர் அவர்களில் தங்கி இருக்கும் அவர்களது துணைவி அல்லது துணைவன் மற்றும் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கும் - கிடைக்கும் ஓய்வூதிய வசதி, தனியார்துறை ஊழியர்களுக்கு கிட்டுவதில்லை. அவர்களைப் பொறுத்த வரை உழைக்கும் காலத்தில் அவர்கள் சேமித்த - அவர்கள் பெயரில் சேமிக்கப்பட்ட - உழைப்பின் பயனான ஊழியர் சேம லாப நிதி மட்டுமே அவர்களுக்குக் கை கொடுக்கக் கூடியது.

அவர்களின் அந்த உழைப்பைப் பாதுகாத்து, உரிய வட்டி வருமானங்களுடன் அவர்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டிய அரசாங்கம், அந்த நிதியைத் தன் பாதுகாப்பில் வைத்துக் கொண்டு, அதன் மூலம் ஊழல், மோசடிகளிலும், குளறுபடித்தனங்களிலும் ஈடுபட்டு இருக்கின்றமை பற்றிய ஆய்வு அறிக்கை இப்போது வெளியாகியிருக்கின்றது. 'வெரிட்டே ரிசர்ச்' நிறுவனத்தின் புதிய ஆய்வு அறிக்கை இந்த விடயங்களை அம்பலப்படுத்தி இருக்கின்றது.

2015 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இடம்பெற்ற மிகப் பிரசித்தி பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட தடயவியல் கணக்காய்வு அறிக்கைகளின் கண்டுபிடிப்பின்படி இந்த ஊழியர் சேம லாப நிதியத்தில் அக்காலகட்டத்தில் பெரும் மோசடிகள், தவறான கையாள்கைகள், குளறுபடிகள் தாராளமாக இடம் பெற்றிருக்கின்றமை அம்பலமாகியுள்ளது.

ஊழியர் சேம லாப நிதி மூலம் நிதியத்திற்குக் கிடைக்கும் வருவாயை சாதகமற்ற - முறையற்ற - பிணைமுறிப் பத்திரங்களைவாங்குவதற்குச்செலவிட்டதன் மூலம் 2002 - 2015க்கு இடைப்பட்ட காலத்தில் மட்டும் ஆயிரம் கோடி ரூபா வரை இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதேபோல ஒழுங்கற்ற முதலீடுகள் காரணமாக 1998 - 2017 காலத்தில் மேலும் ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இந்த காலகட்டங்களில் பங்குச்சந்தை மற்றும் பிணைமுறிகளில் தவறான முதலீடுகள் மேற்கொண்டமையால் 2,000 கோடி ரூபா வரையிலும், பட்டியலிடப்படாத பங்குச்சந்தைகளில் முதலீடு செய்ததால் 1,200 கோடி ரூபா வரையிலும் வருமானத்தையும் ஊழியர் சேமலாப நிதியம் இழந்திருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஏற்கனவே நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்காக இதுவரையில் ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து தான் பெற்றுக் கொண்ட கடன்களுக்கான வட்டியை அரசு பெருமளவில் குறைத்து அவர்களின் வயிற்றில் அடித்து விட்டது.

ஆக, தனியார் துறை ஊழியர்கள் தங்களின் அன்றாடம் காய்ச்சி நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்காக - தங்களின் ஓய்வு கால வயிற்றுப்பாட்டுக்காக - சேமித்த பணத்தை இதுவரை இருந்த அரசுகள், அவற்றின் நிர்வாகிகள் மோசமாக சூறையாடி விளையாடியிருக்கின்றார்கள் என்பது காலம் கடந்து இப்போது அம்பலமாகி வருகின்றது.

2015 க்கு பின்னர் இதுவரையான பத்து ஆண்டுகளில் இந்த நிலைமை இன்னும் எவ்வளவு மோசமாக இருந்திருக்கும் என்பது தெரியவில்லை.

பாவம் அப்பாவி தனியார் துறை ஊழியர்கள். அவர்கள் தமது ஓய்வு காலத்துக்காக, பணி செய்யும் போது கஷ்டப்பட்டு உழைத்த பணம், இடையில் வந்த அரச நிர்வாகிகளினால் சூறையாடப்பட்டிருப்பதும் தவறான முதலீடுகள் மூலம் கபளீகரம் பண்ணப்பட்டிருப்பது மிகப்பெரிய வரலாற்றுக் குற்றமாகும்.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரிசி ஆலை உரிமையாளருக்கு ரூ. 17 லட்சம் காப்புறுதி!

(எஸ். நிதர்ஷன்)


வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரிசி ஆலை உரிமையாளர் ஒருவருக்கு அரச காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் 17 லட்சம் ரூபா நிதியைக் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையாக வழங்கியுள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் 30 விவசாயிகளின் நெல் களஞ்சியபடுத்தபட்டிருந்த நிலையில் டிசெம்பர் மாதம் சீரற்ற கலாநிலையால் வெள்ளம் உட்புகுந்து நெல் மூட்டைகள் அழிவுக்குள்ளாகியிருந்தன.

இந்த நிலையில் இலங்கை காப்புறுதி கூட்டுதாபனத்தின் சங்கானை கிளையில் குறித்த நபர் ஏற்கனவே 44 ஆயிரம் ரூபா காப்புறுதியை வருடாந்த தொகையாக செலுத்தி வரம் நிலையில் 17 லட்சத்து 9 ஆயிரம் ரூபாவை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய பொதுகாப்புறுதி முகாமையாளர் அஜித்குமார் வழங்கி வைத்தார்.

இதனபோது சங்கானை கிளை முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.





EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# நுவரெலியா ஒருங்கிணைப்புக் கூட்டம் மஞ்சுள சுரவீர ஆராச்சி தலைமையில்

**(மஸ்கெலியா)**

நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆராச்சி தலைமையில் நேற்று முன்தினம் (04) நுவரெலியா மாவட்ட செயலகத்தின் மிராக்கிள் மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் இந்த மாவட்டத்துக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. அந்த ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை வினைத்திறனாகவும் விரைவாகவும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அனைத்து அதிகாரிகளதும் பொறுப்பாகும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மஞ்சுள சுரவீர ஆராச்சி தெரிவித்தார்.

ஏற்கனவே சில துறைகளுக்கு சென்ற ஒதுக்கீடுகள் மீண்டும் பணிக்கு எடுக்கப்பட்டது என்றும் நிலைமையை கருத்தில் கொண்டு ஒதுக்கீடுகள் சற்று குறைக்கப்படும் என்றும், ஆனால் வளர்ச்சி பணிகள் திறம்பட நடந்தால், இரண்டாம் கண்காணிப்பாளரின் கீழும் ஒதுக்கீடு செய்ய முடியும் என்றும் தலைவர் குறிப்பிட்டார்.

மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள தீ அனர்த்தம் காரணமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்டவர்களை ஒன்றிணைத்து "தூய்மையான இலங்கை" திட்டத்துடன் இணைந்து வீடுகளைத் தயார்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மஞ்சுள சுரவீர ஆராச்சி மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா கிரகோரி ஏரியின் பராமரிப்பு மற்றும் நீர்வாழ் தாவரங்களை அகற்றுவது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது. காணி அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, நீர்ப்பாசன அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, நீர் வழங்கல் போன்ற விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குக் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான் மற்றும் ஆர்.ஜி.விஜேரத்ன, நுவரெலியா மாவட்ட செயலாளர் திருமதி துஷாரி தென்னகோன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சமிலா ரணசிங்க மற்றும் அரச உயர் அதிகாரிகள் குழுவினர் கலந்து கொண்டனர்.




# விஜயாலயன் அறக்கட்டளையின் அனுசரணையில் செயலமர்வு

விஜயாலயன் அறக்கட்டளையின் அனுசரணையில் பொகவந்தலாவையில் அமைந்துள்ள கெம்பியன் தமிழ் வித்தியாலயம், லொயிலோன் தமிழ் வித்தியாலயம், பெட்ரசோ தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 105 மாணவர்களுக்கான விஞ்ஞான பாடத்துக்கான பரீட்சை நோக்கு செயலமர்வு சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வளவாளர்களாக திருகோணமலையில் இருந்து முன்னாள் அதிபர் பு.முரளிதரன், திருமதி நந்தினி முரளிதரன் ஆகியோர் செயலாற்றினர்.

விஜயாலயன் அறக்கட்டளை மலையகம், திருமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் தேவைக்கு உரிய புலமைப் பரிசில்களைத் தொடர்ந்து வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# மட்டக்களப்பு எல்லைப் பிரச்சினைகளை விசேட குழுவை அமைத்துத் தீருங்கள்!

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை

(எஸ். சினீஸ்கான்)

எமது நாட்டில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் பல ஆண்டுகளாளாகத் தீர்க்கப்படாமல் காணப்படுகின்றன. இவை நீங்கள் ஆட்சிக்கு வந்த பின் உருவான பிரச்சினைகள் அல்ல. ஒவ்வொரு பிரதேசங்களிலும் மாவட்டங்களிலும் நீண்ட காலமாக இருந்து வருகிறது. மக்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்து உங்களை ஆட்சிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். எனவே இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உரிய அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் இது தொடர்பில் வலியுத்துகிறேன் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற 2025 வரவு – செலவுத் திட்டத்தின் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துக்கான எல்லைகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. பானம்பலன என்ற ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் சிபாரிசுகளை முன்வைத்திருந்தது. இந்த சிபாரிசுகளின் அடிப்படையில் நாட்டில் பல்வேறுபட்ட பகுதிகளில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட நிலையிலும் கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலக பிரிவின் பிரதேச சபையும் இன்னும் உருவாக்கப்படாமல், எல்லைகள் நிர்ணயிக்கப்படாமல் நிர்வாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே பானம்பலன ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கும் அமைவாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரதேச செயலகங்களின் எல்லைகள் இன்றளவில் நிர்ணயிக்கப்படவில்லை. நிர்வாகம் ஒரு செயலகம், காணி ஒரு செயலகம் என்று யுத்தத்தால் ஏற்பட்ட பிரச்சினைகளால் குளறுபடிகள் தோற்றம் பெற்றுள்ளன. பொது நிர்வாக அமைச்சு ஊடாக விஷேட குழு ஒன்றை நியமித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.– என்றார்.






# சர்வதேச மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் அம்பறை அலுவலகம் சாய்ந்தமருதில் திறப்பு!

(எஸ்.அஷ்ரப்கான்)

சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் அண்மையில் உத்தியோக பூர்வமாகச் சாய்ந்தமருதில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அமைப்பின் இலங்கைக்கான பொது பணிப்பாளர் துவான் ரிஸ்வான் காசிம் கலந்து கொண்டு அலுவலகத்தை உத்தியோக பூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்சுதீன் மற்றும் விசேட அதிதிகளாக இந்த அமைப்பின் இலங்கைகான பொதுச் செயலாளர் மனோஜ் சஞ்சீவ, கொழும்பு மாவட்ட பணிப்பாளர் கோசலா கஜநாயக, கண்டி மாவட்ட இளம் பணிப்பாளர் மஹ்மூத் மற்றும் சாய்ந்தமருது 06 ஆம் பிரிவு கிராம சேவகர் திருமதி ஸஹன்னாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையதின் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஸ்வர், செயலாளர் நிஷார், கணக்கு பரிசோதகர் ஹிம்தாட், பொருளாளர் ரஷீட், உதவி செயலாளர் முஜீப் மற்றும் உறுப்பினர்களுக்கும் அம்பரை மாவட்ட பணிப்பாளர் திருமதி ஏ.ஜே.எப் . பைரூஷா நன்றிகளை தெரிவித்தார்.

இங்கு அம்பாறை மாவட்ட அங்கத்தவர்களுக்கான சுங்கத்துவ அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன.









# மலையகப் பாடசாலைகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி!

## 4 லட்சம் ரூபா பெறுமதியில் வழங்கியது

பண்டாரவளை - கொஸ்லந்த பகுதியில் அமைந்துள்ளஸ்ரீ கணேஷா தமிழ் மகா வித்தியாலயத்துக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறு மதியான கருங்கல்லில் வடிவமைக் கப்பட்ட பிள்ளையார், எலி ஆகிய சிலைகள் வழங்கப்பட்டன.

பதுளை - வெலிமடை, வோர்விக் பகுதியில் கஷ்டப் பிரதேசத்தில் அமைந் துள்ள சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 160 மாணவர்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறு மதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பாடசாலையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் ஒரு லட்சம் ரூபா நிதி பாடசாலை முதல்வரிடம் கைய ளிக்கப்பட்டது.

பதுளை- எட்டாம்பிட்டிய, 2 ஆம் பிரிவில் அமைந்துள்ள வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலின் கோரிக்கைக்கு அமைவாக, நேரடியாகச் சென்று பயன்பாடற்று பழுதடைந்த நிலையில் உள்ள தேரைத் திருத்தி வழங்குவது தொடர்பாகவும் கள ஆய்வு மேற்கொள் ளப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல் வர், சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர் களுடன் நேரடியாகச் சென்று உதவி களை வழங்கியதுடன் கள ஆய்வுக ளையும் மேற்கொண்டார்.





# திருக்கோவில் ஆலயத்தின் இராஜகோபுர இரண்டு தளங்களது வேலைகள் பூர்த்தி !

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கிலங்கையின் வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் பல வருடங்களாக தடைபட்டிருந்த இராஜகோபுரத்தின் தளங்கள் இரண்டின் வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன.

நாடறிந்த சமூகச் செயற்பாட்டாளர் பரோபகாரி முன்னாள் கல்முனை லயன்ஸ் கழகத் தலைவர் பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமாரால் அண்மையில் மீண்டும் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அவரது உபயத்தில் முதலிரு தளங்கள் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய ஏழு தளங்களும் படிப்படியாக நிர்மாணிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டைய காலத்தில் இராஜராஜ சோழனால் இந்த ஆலயம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னொரு காலத்தில் "கந்தபாணத்துறை" என்று அழைக்கப்பட்ட திருக்கோவில் சங்ககாலம் மருவிய பின்பு திருக்கோவில் என்று அழைக்கப்பட்டது.

ஆலயத்தின் மூலப்பொருளான 108 அடி உயரமான 9 தளங்களுடன் கூடிய இராஜகோபுரம் அடித்தளம் இட்டு இதுவரை காலமும் முற்றுப் பெறாத நிலையில் 33 அடி உயரத்தில் காணப்பட்டது.



அதனை நிவர்த்தி செய்யும் முகமாக அடுத்த கட்ட திருப்பணியை ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையிலான பரிபாலன சபையினர் கூட்டம் கூடி அடுத்த கட்ட நகர்வை முன்னெடுத்திருந்தனர்.

அதன் முதற் கட்டமாக இரு தளங்களை சுமார் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நுவரெலியா மாவட்ட நுண்ணறிவுப் போட்டி தலவாக்கலை தமிழ் மகா வித்தி. முதலிடம்!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் பௌதீக மன்றத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்டத்தின் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட பௌதீகவியல் நுண்ணறிவுப் போட்டியில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் முதல் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

இரண்டாம் இடத்தை ஹைலண்ட்ஸ் கல்லூரியும் மூன்றாமிடத்தை கொட்டக்கலை கேம்ப்ரிட்ஜ் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

இந்தப் போட்டியில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகள் கலந்து கொண்டன.

இந்தப் போட்டியில் உயர் தர மாணவர்கள் பௌதீகவியல் எழுத்துப் பரீட்சை, இரசாயனவியல் வினாவிடை போட்டி, விவாதப் போட்டி ஆகியவற்றில் பங்கு பற்றினர். போட்டி முடிவுகளின் படி, பௌதீகவியல் எழுத்துப் பரீட்சையில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவி விதுர்ஷனா முதல் இடத்தையும் ஹட்டன் ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரி மாணவி ஷேவிதா இரண்டாம் இடத்தையும் கபிஷான் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

இரசாயனவியல் வினா விடைப் போட்டியில் முதலாம் இடத்தைத் தலவாக்கலை தமிழ் மகா வித்தியால அணியும், இரண்டாம் இடத்தைக் கேம்பிரிட்ஜ் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரி அணியும் பெற்றன.

விவாதப் போட்டியில் முதலாமிடத்தை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயமும் இரண்டாமிடத்தை ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரியும் மூன்றாம் இடத்தை கேம்பிரிட்ஜ் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

முதலாம் இடத்தை பெற்ற தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களைக் கௌரவித்து ஊக்குவிக்கும் முகமாக பாடசாலையின் அதிபர் ரோஹிணி தலைமையில் விசேட கௌரவிப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் ரோஹினி, உப அதிபர் ஜெகதீசன், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# திருமலை உள்ளாட்சித் தேர்தலில் ஐந்து சபைகளும் ஐ.தே.கவுக்கே!

## முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி ஐந்து சபைகளைக் கைப்பற்றும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் திருகோணமலை மாவட்ட தவிசாளரும், மூதூர் தொகுதி அமைப்பாளரும், முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (05) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் ,

வாக்குறுதி அளிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இன்று பெரும் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. அதேநேரத்தில் முஸ்லிம் சமூகம் தங்களுடைய இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இந்த தேசிய அரசில் அவர்களுடைய கோரிக்கைகள் அத்தனையும் நிராகரிக்கப்பட்டு இனவாதமாக, மதவாதமாக முன்வைத்து அவருடைய பிரசாரத்தை கொண்டு செல்வதன் காரணமாக முஸ்லிம் சமூகம் இந்த முறை வித்தியாசமான முடிவை எடுக்கும் அளவுக்கு மாறியுள்ளனர்.

நீண்ட காலமாக இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் யானை சின்னத்தில் போட்டியிடுவதே அதிக வேட்பாளர்களின் ஆர்வமாக உள்ளது.




கூடுதலான தமிழ் சிங்கள முஸ்லிம் பிரதேசங்களில் பெரும்பான்மை சிங்கள மக்களுடன் சிறுபான்மைச் சமூகமும் இணைந்து இந்த முறை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சபைகள் கூடுதலாகத் தெரிவு செய்யப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஐந்து உள்ளூராட்சி சபைகளை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.- என்றார்.





# தூய்மையான இலங்கை திட்டத்தில் பெண்களின் பங்கில் சிரமதானம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு பல தலைப்புகளின் கீழ் நிகழ்வுகள் மகளிர் விவகார அமைச்சால் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் மாலிந்துறை சுகாதார பராமரிப்பு நிலையத்தை சேர்ந்த பகுதிகளைச் சுத்தம் செய்யும் நிகழ்வு கிண்ணியா மகளிர் மகா சங்க உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், வெளிக்களப் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர், மகளிர் மற்றும் பெண்கள் பிரிவின் உத்தியோகத்தர்கள், சிறு கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது கடற்கரை வீதியில் உணவகங்களில் பரிசோதனை

## ‘கியூ.ஆர்.’ ஸ்டிக்கர்களும் ஒட்டப்பட்டன

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட கடற்கரை வீதியில் உள்ள உணவகங்கள் நேற்று (05) திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன் ‘கியூ.ஆர்.’ ஸ்டிக்கர்களும் ஒட்டப்பட்டன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். அஸ்லம் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் ஏ. முஸம்மில் முதலானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற வகையில் உணவைக் கையாண்ட உணவக உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அந்த உணவகங்களில் கடமை புரியும் ஊழியர்கள் கட்டாயம் மருத்துவ சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத்தப்பட்டது.

பொது மக்கள் உணவு கையாளும் நிறுவனங்களில் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை உடனடியாக அறிவிப்பதற்கு ‘கியூ.ஆர்.’ ஸ்டிக்கர்களும் உணவகங்களில் ஒட்டப்பட்டன.

பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை ‘கியூ.ஆர்.’ ஸ்டிக்கர்களை ஸ்கான் செய்வதன் மூலம் உணவகங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தெரிவித்தார்.



# வடக்கு மீனவர்களது வாழ்வாதாரத்தை சுரண்டும் இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்துக!

## இல்லையேல் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்கிறார் ரவிகரன் எம்.பி.

**(பா.சதீசன்,
விஜயரத்தினம் சரவணன்)**

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடலோர மக்களில் பெரும்பாலானோர் மீன்பிடித்தல் அல்லது மீன்வளம் தொடர்பான தொழில்துறையை நம்பியுள்ளனர். அதுவே அவர்கள் அறிந்த ஒரே வாழ்வாதார நடவடிக்கையாகும்.

மீனவ மக்களுடைய குறித்த வாழ்வாதார ஆதாரத்தை சுரண்டுகின்ற வகையில் செயற்படும் இந்திய இழுவைப்படகுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் செயற்படும் இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்தத் தவறினால் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி உள்ளிட்ட வடபகுதி மீனவர்கள் வீதிகளில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்படும். அத்தகைய நிலையை ஏற்படுத்த வேண்டாம்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்துரைராசாரவிகரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில்நேற்று (05) இடம்பெற்ற 2025 வரவு – செலவுத்திட்ட கடற்றொழில் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப்படகுகள் செய்யும் அத்துமீறிய செயல்களால் எமது வடக்கு மீனவர்கள் தொழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எமது மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் சேதப்படுத்தப்படுகின்றன. வடக்கு மீனவர்களின் வாழ்வு கேள்விக் குறியாக்கப்படுகின்றது.

இந்திய விசைப்படகுகள் மீன்பிடியில் மிகவும் அழிவுகரமான முறைகளில் ஒன்றாகக் கருதப்படும் அடித்தள இழுவை வலை பிரயோகத்தை மேற்கொள்கின்றன.

ஆழ்விசைப்படகுகள் “கடலின் ஹூவர்ஸ்” (hoovers of ocean) என்றும், புல்டோசர்கள் போன்று மீன் மற்றும் பிறஅடித்தாள இனங்களை அழித்தொழிக்கின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பெருங்கடலில் இந்த அடித்தள விசைப் படகுகளின் செயற்பாடுகள் தொடர்ந்தால் விரைவில் எந்த மீனையும் கடலில் பிடிக்க இயலாத நிலை ஏற்படும்.

அடித்தள இழுவை விசைப்படகு கடல் தளத்தைச் சிதைத்து, கடல் சூழலை சீர்குலைத்து பவளப் பாறைகளை சேதப்படுத்துகின்றது. பிளாங்கடன்களின் வளர்ச்சியை பாதிக்கின்றது. மற்றும் இறுதியாக ஆழ்கல் இனங்களில்உள்ள கடல் பாறை மீன், இறால் மற்றும் பிறவகைகளை பாதிக்கின்றது. இது வாழ்விட சீரழிவுக்கு வழிவகுக்கும். கூடுதலாக இழுவை விசை இழுத்தல் உண்மையில் ஒரு தேர்ந்தெடுக்கப்படாத முறையாகும்.

ஏனெனில் இலக்கு அல்லாத உயிரனங்களும் பிடிக்கப்படுகின்றன. சுற்றுச் சூழலும் அழிக்கப்படுகின்றது. இவ்வாறான இழுவை வலைகளைப் பயன்படுத்தும் மீனவர்கள் கரைக்கு வந்தபிறகும், கடலிலும் தாங்கள் விற்கக் கூடிய மீன்களை மட்டும் எடுத்துக் கொண்டு இலக்கு இல்லாத கடல் உயிரினங்களை, மீன் இனங்களை வீசுகின்றனர்.

இலங்கையின் கடலோர மக்களில் பெரும்பாலானோர் மீன்பிடித்தல் அல்லது மீன்வளம் தொடர்பான தொழில்துறையை நம்பியுள்ளனர்.

அதுவே அவர்கள் அறிந்த ஒரே வாழ்வாதார நடவடிக்கையாகும். அந்த வாழ்வாதார ஆதாரம் அழிக்கப்பட்டால், மனித பாதுகாப்பை பாதிக்கும் வகையிலான மிகப்பெரிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விளைவுகள் ஏற்படும்.

எல்லையைக் கடக்கும் மீன் பிடிக் கப்பல், படகுகள் தவறுகலாக ஒரு சிறிய சதவீத நிகழ்வுகளை மட்டுமே உள்ளடக்கியது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

பெரும்பாலான எல்லைக் கடப்புகள் வேண்டுமென்றே இலங்கைக் கடல் எல்லைகளுக்குள் ஆழமாகப் பயணிப்பதை உள்ளடக்கியது. ராமேஸ்வரம் மீன்பிடிப் படகுகள் இலங்கைப் பகுதியில் மட்டுமே நல்ல மீன்பிடி மைதானங்களை காண்கின்றன. எனவே அவற்றின் பெரும்பாலான மீன்பிடித்தல் அந்தப் பக்கத்தால் இடம்பெறுகின்றது என்பது வெளிப்படையான இரகசியமும், உண்மையுமாகும்.

இலங்கைக் கடற்பரப்பில் பிரதானமாக இறால் பெறப்படுவதால், பெரும்பாலான விசைப்படகுகள் பெலாஜிக் அல்லது விரிகடலுக்கு உரிய இழுவை வலைகளுடன் ஜோடியாக இழுவை செய்யும் இந்திய விசைப் படகுகள், இலங்கைக் கடற்பரப்பை அடைகின்றன. ஒன்றைவிட்ட ஒவ்வொரு நாளும், கிட்டத்தட்ட 500 இழுவைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

பல பாதுகாவலர்களும், சர்வதேச விஞ்ஞானிகளும் இழுவை வலைகள் கண்மூடித்தனமாக அனைத்து கடல் வளங்களையும் அழிப்பதால் அவற்றை முழுமையாக தடைசெய்ய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளனர். மீன்வள விஞ்ஞானிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில் இலங்கை

**தொடர்ச்சி▼**

# வடக்கு மீனவர்களது வாழ்வாதாரத்தை சுரண்டும் இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்துக!

தொடர்ச்சி▼

அரசு இலங்கை கடற்பரப்பில் அடித்தள இழுவைப் படகுகளை இயக்கத்தடை விதித்தது.

இலங்கையின் வடக்குப் பகுதியில் ஐந்து மாவட்டங்களில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஆகிய நான்கு மாவட்டங்களில் மீன்பிடியாளர்கள் தமது முழுமையான வாழ்வாதாரமாக மீன்பிடியையே நம்பியுள்ளனர்.

நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்தக் குடும்பங்களின் உணவுத் தேவைகள், பிள்ளைகளின் கல்வித் தேவை உட்பட, அத்தியாவசியத் தேவைகள் இந்தக் கடலையே நம்பி உள்ளன. இதனால் கிடைக்கும் வருமானத்தை தமது வாழ்வாதாரமாக எண்ணி லட்சக் கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் கொடூரமான வகையில், மிகவும் கொடூரமான முறையில் சட்டவிரோதத் தொழில்கள் செய்து, இலங்கை அரசால் தடை செய்யப்பட்டதாக அறியத்தந்திருக்கும் தொழில்களைக் கொள்ளையர்களைப் போல் செய்துகொண்டிருக்கும், திருட்டுக் கும்பலை பிடிக்காமல் சட்டத்தின் முன் நிறுத்தாமல் இருக்க காரணம்தான் என்ன?

உங்களுடைய மீன்பிடியாளர் சமூகத்தை புறக்கணிக்க வேண்டாம். வயிற்றில் அடிக்கவேண்டாம். எமது மீனவர்களை வாழவிடுங்கள் என்றுதான் கேட்கின்றோம். சட்டவிரோத கடற்றொழில்களைச் செய்து மீனவர் சமூகத்தை அழித்துக் கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள சட்டவிரோதிகளையும், எல்லைதாண்டிவந்து எமது கடல் வளங்களை அழிக்கும் அயல் நாட்டு சட்டவிரோதிகளையும் தண்டியுங்கள்.

எமது மக்களை மேலும், மேலும் காயப்படுத்தாமல் கடற்படை, பொலிஸார், கடற்றொழில் திணைக்களப் பணியாளர்கள் தங்களுடைய கடமைகளைச் சீராகச் செய்தால் நிலமைகள் சீராகும்.

மீன்பிடிச் சட்டங்களை நடைமுறைக்கு கொண்டு வந்தால் இந்தப் பிரச்சனைகள் தீர்ந்து விடும். சட்டங்களை உருவாக்கி வைத்துக் கொண்டு, அதனை முழுமையாக செயற்படுத்தாமல் எமது மீனவ மக்களின் வாழ்வை அழித்துக்கொண்டு இருக்கின்றீர்கள்.

கடற்றொழில் அமைச்சர், எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அறிவார்.

இந்திய இழுவைப் படகுகள் தமது எல்லைகளைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும் விவகாரத்தில் இந்திய அரசு இந்திய கடற்படையினர் உள்ளிட்ட தரப்பினரும் பிழையான விதத்தில் செயற்படுகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றேன்.

இந்திய கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் நுழைவதை இந்திய அரசும், இந்திய கடற்படையும் தடுக்க வேண்டும். அதேபோல் இலங்கைக் கடற்படையினரும் இந்த இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி எமது கடற்பரப்புக்குள் நுழையும் விடயத்தில் பொறுப்பற்று செயற்படுகின்றனர்.

அண்மையில் மியன்மார் நாட்டு அகதிகள் படகொன்று முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு வருகைதந்தது. குறித்த அகதிகள்படகு முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு வருகைதரும்வரை கடற்படையினருக்குத் தெரியாது. அவ்வாறெனில் கடற்படையினர் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கைக் கடற்பரப்பைப் பாதுகாக்க வேண்டியது இலங்கைக் கடற்படையின் பொறுப்பாகும். அகவே இந்த விடயத்தில் கடற்றொழில் அமைச்சரே நீங்கள் தலையீடு செய்யுங்கள். மீனவ மக்களைக் காப்பாற்றுங்கள்.

இல்லையேல் வடக்கில் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி நான்கு மாவட்டங்களிலும் மீனவ மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவார்கள். அந்த நிலையை ஏற்படுத்தாதீர்கள். – என்றார்

# ஒரு நாளில் 10 வீடுகள் பயனாளிகளுக்கு!



(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஊடாக 10 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

கடந்த ஆண்டு அரசின் நகர அபிவிருத்தி வீடமைப்பு மற்றும் புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியில் கல்முனை வடக்கு பிரதேச செயலக கிராமங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 28 வீடுகள் அமைப்பதற்காக நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது.

அந்தத் திட்டத்தில் நேற்று 05) கல்முனை, சேனைக்குடியிருப்பு பகுதிகளில் 10 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீரங்கன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. குமுதராஜ் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தால் ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 10 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருந்தாலும் வீடுகளை பெற்றுக் கொண்ட பயனாளிகளின் மேலதிக பங்களிப்புடனும் வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.



# தொகுதி மறுசீரமைப்பால் தென் மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவம் குறையும் ஆபத்து: விஜய் கருத்து

தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் தமிழக வெற்றிக் கழகம், தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் இணைந்து போராடும் என அக்கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"நம் அரசியல் சாசனத்தின் 84 ஆவது சட்டத் திருத்தத்தின்படி நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுவரையறை 2026 ஆம் ஆண்டு வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, அடுத்த ஆண்டுக்கு பிறகு இந்த மறுசீரமைப்புப் பணி, மத்திய அரசால் தொடங்கப்பட வாய்ப்புள்ளது. எவ்வகையில் இந்த மறுவரையறை நடைபெறும் என்பது பற்றி எந்த ஒரு தெளிவான விளக்கமோ வாக்குறுதியோ மாநிலங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

தற்போதைய நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மாற்றாமலோ அல்லது இன்னொரு அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்தியோ இந்த மறுவரையறை நடைபெறலாம். புதிய மக்கள் தொகையை ஒரு முக்கிய அளவுகோலாகக் கொண்டு நிகழ்த்தப்படும் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பில் தென் மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறையும் ஆபத்து உள்ளது.

தற்போது 543 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும்போதே அனைத்து உறுப்பினர்களுக்கும் கேள்வி நேரங்களில் கேள்வி கேட்க அனுமதி கிடைப்பதில்லை. இத்தகைய சூழ்நிலையில் மேலும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் வெறும் அலங்கார பொம்மைகளாக இருப்பதில் என்ன பலன்?

நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுவரையறையை மத்திய அரசு தன்னிச்சையாக முன்னெடுக்குமானால், அது தென் மாநிலங்களின் அரசியல் முக்கியத்துவத்தை முற்றிலும் அழிப்பதற்கான முயற்சியாகவே பார்க்கப்படும். ஒரு சில வட மாநிலங்களில் மட்டும் வெற்றி பெற்று, மத்தியில் ஆட்சி அமைத்து விடலாம் என்ற சூழ்நிலை உருவானால் அது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

இந்த மிக முக்கியமான தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் தமிழக வெற்றிக் கழகம், தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் தோளோடு தோள் நின்று இணைந்து போராடும். மேலும் தவெக தொண்டர்கள் தங்கள் இறுதிமூச்சு உள்ள வரை தமிழகத்தின் நலனைக் காப்பார்கள் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பேத்கர் வழங்கிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை விழுமியங்களில் ஒன்று 'கூட்டாட்சித் தத்துவமுறை'. ஆதலால் மத்திய அரசு அனைத்து மாநிலங்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே இந்த மறுசீரமைப்பு பற்றிய முடிவை எடுக்க வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகம் வலியுறுத்துகிறது."- என்று குறிப்பிட்டுள்ளார்.

# அம்மா உயிரை மாய்க்க முயற்சி செய்யவில்லை

## பாடகி கல்பனாவின் மகள் விளக்கம்

பிரபல பின்னணிப் பாடகி கல்பனா உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்யவில்லை என அவரின் மகள் தயா பிரசாத் பிரபாகர் கருத்து வெளியிட்டுள்ளார்.

சென்னையைச் சேர்ந்த பிரபல பின்னணி பாடகி கல்பனா ஹைதராபாத்தின் நிசாம்பத் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வருகிறார்.

இவர் நேற்றைய தினம் மயக்க நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது அவர் குணமடைந்து வருகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து அவரது மகள் தயா பிரசாத் பிரபாகர் கருத்து வெளியிடுகையில்,

"என் அம்மா இப்போது நன்றாக இருக்கிறார். அவருக்கு எந்த பிரச்சனையும் இல்லை. என்னுடைய தாய் தந்தை இடையே எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. அவர்கள் இருவரும் மகிழ்ச்சியாகவே உள்ளனர்.

மன அழுத்தம் காரணமாகவே அம்மா, வைத்தியரின் பரிந்துரையின் பேரில் தினமும் தூக்க மாத்திரைகளை எடுத்து வருகிறார்.

அந்த வகையில் அவர் வைத்தியரின் பரிந்துரையையும் விட அளவுக்கதிகமாக மாத்திரையை எடுத்துக் கொண்டதால் தான் மயக்கமடைந்துள்ளார்.



அம்மா உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி எல்லாம் செய்யவில்லை. என் அம்மாவும் அப்பாவும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். குடும்பத்தில் எல்லோரும் மிகவும் நலமாக இருக்கிறார்கள்.

தயவுசெய்து எங்கள் விடயங்களை தவறான முறையில் கையாள வேண்டாம்." என கல்பனாவின் மகள் கேட்டுக் கொண்டுள்ளார்.





# உணவுப் பொருள்களின் விலை காசாவில் அதிகரிப்பு

காசாவில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிக ரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இஸ்ரேல் உதவி விநியோகங்களை நிறுத்திய தையடுத்து தற்போது விலை அதிகரித்துள்ளன.

அன்றாட பாவனைக்கு மக்கள் கொள்வனவு செய்யும் கோதுமை மா, மரக்கறிகளின் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான அனுமதியை இடைநிறுத்தியது வடகொரியா

வடகொரியாவில் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது.

பிரித்தானிய,கனடா, கிரீஸ், நியூசிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்திரியா, அவுஸ்திரேலியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள் அதிகம் பயணிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

கொரோனா தொற்றுநோய்க்கு முன்னர் வடகொரியாவிற்குப் பயணித்த சர்வதேச சுற்றுலாப் பயணிகளில் 90 வீதத்துக்கும் அதிகமானோர் சீனர்கள் என புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

ஐந்து ஆண்டுகளில் முதல் முறையாக மேற்கத்திய சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்குள் நுழைந்த சில வாரங்களுக்குப் பிறகு, சுற்றுலாப் பயணிகள் வருகையை வட கொரியா தற்போது நிறுத்தியுள்ளது.







# ஈலோன் மஸ்கின் ஆலோசனையை நிராகரித்தார் சுனிதா வில்லியம்ஸ்

சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் கடந்த ஒன்பது மாதங்களாகச் சிக்கியுள்ளார்.

இம்மாத இறுதியில் இருவரையும் பூமிக்கு அழைத்து வருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், செய்தியாளர் சந்திப்பில் பேசிய சுனிதா வில்லியம்ஸ் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனர் ஈலோன் மஸ்க் ஆலோசனையை நிராகரித்துள்ளார்.

முன்னதாக 2030 ஆம் ஆண்டு செயலிழக்கத் திட்ட மிடப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையம் அதற்கு முன்பே செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று ஈலோன் மஸ்க் தெரிவித்து இருந்தார்.

இவரது இந்த கோரிக்கையை சுனிதா வில்லியம்ஸ் நிராகரித்துள்ளார்.

கனடா முரசு
வியாழக்கிழமை 06/03/2025

## டொரோண்டோவில் வெள்ள அபாயம்

டொரோண்டோ பெரும்பாக பகுதி மக்களுக்கு வெள்ள அபாயம் காரணமாக நீர்நிலைகளுக்கு செல்ல வேண்டாம், மற்றும் இயற்கை உறைபனி மேற்பரப்புகளில் நுழைய 03



# கனடா பின்னோக்கி செல்லாது: ஜஸ்டின் ட்ரூடோ கூறுகின்றார்

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடா மற்றும் மெக்ஸிகோவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு கடுமையான வரிகள் விதித்தமைக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உறுதியளித்துள்ளார்.**

**இன்று, அமெரிக்கா தனது நெருங்கிய கூட்டாளியான கனடாவிற்கு எதிராக வணிகப் போரை ஆரம்பித்துள்ளது தெரிவித்துள்ளார்.**

அதே நேரத்தில், அவர்கள் ரஷ்யாவுடன் நேர்மறையாக செயல்பட விரும்புகிறார்கள், விளாடிமிர் புடினை சமாதானப்படுத்துகிறார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப் தற்காலிகமாக 30 நாள்கள் விடுவித்திருந்த வரிக் கட்டுப்பாடு முடிவடைந்ததைத் தொடர்ந்து, அனைத்து கனடியப் பொருள்களுக்கு 25 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக, கனடா இரண்டு கட்டங்களில் அமெரிக்காவுக்கு எதிராக 30 பில்லியன் டொலர் வரிக்கட்டுப்பாடுகளை உடனடியாக அமல்படுத்துகிறது. மேலும் 125 பில்லியன் டொலர் மதிப்பிலான அமெரிக்கப் பொருள்கள் மீது 21 நாள்கள் கழித்து கூடுதல் வரிகள் விதிக்கப்பட உள்ளது. கனடியர்கள் நாகரிகமானவர்கள், ஆனால் போராட்டத்திலிருந்து பின்வாங்க மாட்டார்கள் என்று ட்ரூடோ உறுதியளித்தார். கனடாவின் நிதி அமைச்சகத்தின் தகவலின்படி, 25 வீத பதிலடி வரிகள் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்கள், மது, கழிவறை காகிதம், ஆடைகள், பாதணி, அழகு சாதனப் பொருட்கள், பயணப்பைகளின் உட்பட பலவகை பொருள்களுக்கு வரி விதிக்கப்பட உள்ளது.

# கனடாவில் இடம்பெற்ற தீ விபத்தில் ஆறு கட்டடங்கள் முற்றாக தீக்கிரை



டொரொண்டோ யோர்க்வில் பகுதியில் இன்று (06) அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ஆறு கட்டடங்கள் முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ளன.

மேலும், பல கட்டடங்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

Scollard Street-ல் அமைந்துள்ள ஒரு கட்டடத்திலேயே அதிகாலை 4:30 மணிக்கு தீ ஆரம்பித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டடம் புனரமைக்கப்பட்டு வந்த நிலையில் 02



# கனடா பொருள்களுக்கு மேலும் வரி விதிக்கப்படும்

## டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை

அமெரிக்கப் பொருள்களுக்கு பதிலடி வரி விதிக்கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டு பொருள்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அண்டை நாடுகளான கனடா மற்றும் மெச்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு, 25 சதவீத வரியை விதிக்கும் உத்தரவை பிறப்பித்துள்ளார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப் படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரி விதிப்பதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார்.

அமெரிக்கப் பொருள்களுக்கு பதிலடி வரி விதிக்கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டு பொருள்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இது குறித்து, ட்ரம்ப் சமூகவலை தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை யில், கனடா ஆளுநர் ட்ரூடோவிடம், அவர் அமெரிக்கா மீது பழிவாங்கும் வரியை விதிக்கும்போது, நமது பரஸ்பர வரி உடனடியாக அதே அளவு அதிகரிக்கும் என்பதை விளக் குங்கள்.என கூறியுள்ளார்.

கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக மாற்றும் யோச னையை அமெரிக்க ஜனாதிபதி கூறிய போது, கனடா பிரதமர் ட்ரூடோ கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். அப்போது முதல் கனடா ஆளுநர்என ட்ரம்ப் குறிப்பிட்டு பதிவுகளை வெளி யிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக் கது




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீ விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ வேகமாக அருகிலுள்ள கட்டடங் கள் மற்றும் வாகனங்களுக்கு பர வியது.

தீ கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், தீயணைப்புத் துறையினர் இன்னும் சிறிய தீப்புள்ளிகளை அணைக்கும் பணியில் உள்ளனர்.

மொத்தம் 10 கட்டிடங்கள் தீயால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என தெரிவிக் கப்பட்டுள்ளது. தீ விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகால பழமை வாய்ந்த கட்ட டங்கள் இழந்தது பொருளாதார ரீதி யாக பெரும் இழப்பாக அமையும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# வரிவிதிப்பால் அமெரிக்கா மீது கடும் கோபத்தில் கனேடியர்கள்

கனடா மீது அமெரிக்கா கூடுதல் வரி விதித்துள்ள விடயம், கனேடிய அரசியல்வாதிகளைவிட, கனேடிய மக்களை அதிகம் கொந்தளிக்கச் செய்துள்ளது.

ஆகவே, அமெரிக்காவுக்கு தக்க பதிலடி கொடுக்கவேண்டும் என கருதும் மக்கள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துவருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி கனடா மீது கூடுதல் வரிகள் விதித்துள்ளதைத் தொடர்ந்து, கனேடிய மக்கள் ட்ரம்ப் மீது எவ்வளவு கோபமடைந்துள்ளார்கள் என்பது சமீபத்தில் Angus Reid நிறுவனம் நடத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கனேடிய பொதுமக்களில் 45 சதவிகிதம் பேர், தாங்கள் கடும் கோபத்திலிருப்பதாகவும், 37 சதவிகிதம் பேர் அமெரிக்கா தங்களுக்கு துரோகம் செய்துவிட்டதாக உணர்வதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

அமெரிக்காவின் அச்சுறுத்தல் தங்களுக்கு கவலையை உருவாக்கியுள்ளதாக 29 சதவிகிதம் கனேடியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஆகவே, கனடா மீது கூடுதல் வரிகள் விதித்துள்ள அமெரிக்காவுக்கு தக்க பதிலடி கொடுக்கவேண்டும் என்னும் விடயத்துக்கு, ஜனவரி மாதம் முதல், கனேடியர்களிடையே ஆதரவு அதிகரித்துவருகிறது.

சொல்லப்போனால், அமெரிக்காவுக்கு பதிலடி கொடுப்பதற்காக, கனேடிய மக்கள் மூன்று அம்சத் திட்டம் ஒன்றே வைத்திருக்கிறார்கள் எனலாம்.

அது என்னவென்றால், ஒன்று, அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் வரும் அனைத்துப் பொருள்களுக்கும் கனடா அரசு 25 சதவிகித வரி விதிக்கவேண்டும். இந்த விடயத்துக்கு 65 சதவிகித கனேடியர்கள் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

இரண்டு, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முக்கிய பொருள்களை குறிவைத்து வரிகள் விதிக்கவேண்டும். இந்த விடயத்துக்கு 70 சதவிகித கனேடியர்கள் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

மூன்று, அத்தியாவசியமான சில பொருள்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய கனடா தடை விதிக்க வேண்டும். இந்த விடயத்துக்கும் 65 சதவிகித கனேடியர்கள் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.





## டொரோண்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாம் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கனடாவின் சுற்றுச்சூழல் திணைக்களம் ஒரு சிறப்பு வானிலை எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

மழை மற்றும் மிதமான வெப்ப நிலைகள் காரணமாக நகரின் சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் வெள்ளம் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக எச்சரித்துள்ளது.

தேசிய வானிலை நிறுவனத்தின் தகவலின்படி, செவ்வாய்க்கிழமை இரவு மற்றும் புதன்கிழமை 15 முதல் 25 மி.மீ வரை கனமழை பெய்யும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதனால், கீழ்நிலப் பகுதிகளில் உள்ளூர் வெள்ளம் மற்றும் சாலைகளில் நீர் தேங்கும் நிலை ஏற்படலாம்.

கனமழை மற்றும் மிதமான வெப்ப நிலை நிலவும் எனவும் மாலை வேளையில் கடுமையான இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேலும் 25 மி.மீ-ஐ கடக்கும் மழைப் பொழிவு நிகழலாம் என்று வானிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலம் உறைந்துள்ளதால், அதிகளவான மழையை உறிஞ்சும் திறன் குறைந்துள்ளது என வானிலை அறிவிப்பு தெரிவிக்கிறது.

டொரோண்டோவில் இன்று வியாழக்கிழமை மழை அல்லது பனித்துளிகள் பொழியும் வாய்ப்பு உள்ளது. ஆனால் வார இறுதிக்குள் வெயில் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.